29th March 1958]

now they have decided that instead of buying all and sundry types of chassis and building bodies on them, it is better to confine the makes to only two varieties, viz., Leyland Comet and Mercedes Benz. Since we have fixed the type of buses to be got, we apply direct to the firms and ask them to quote the rate at which it will be available for the Government.

Manimuthar Dam

* 462 *Q.*—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri S. B. Adityan) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether water was let into the channels from Manimuthar Dam on 3rd January, 1958 ; and

(*b*) if so, whether the channel leading to Vijayanarayanam tank was supplied with water?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) Yes.

SRI G. GOMATHI SANKARA DIKSHITAR : மணிமுத்தாறு அணைக்கட்டுக் கால்வாய் அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, திருச்செந்தூர், நாங்குனேரி முதலிய நான்கு தாலுகாக்களின் வழியாகச் செல்வதால் இர்ரிகேஷன் முறை இப்பொழுது வகுக்கப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறதா ? அது வகுக்கப்பட்டு விட்டதா, என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இர்ரிகேஷன் முறை எல்லாம் ஏற்கனவே வகுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. K. SOMASUNDARAM : மணிமுத்தாறு அணைக்கட்டிலிருந்து நான்கு தாலுகாக்களுக்குத் தண்ணீர் விடவேண்டியிருப்பதால், எத்தனை குளங்களுக்குத் தண்ணீர் விடலாம் என்று அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா ? அப்படியானால் எத்தனை குளங்களுக்குத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இந்த பாசனத்தின் மூலம் ஏற்கெனவே தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கிற 83,000 ஏக்கராக்களுக்கு தண்ணீர் பாய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதோடு கூட, 20,000 ஏக்கராக்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய குளங்களுக்கும் தண்ணீர் பாய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Heavy electrical equipment

* 463 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there was any proposal to start any concern to manufacture heavy electrical equipment at Avadi in 1956?

THE HON. SRI V. RAMIAH : Yes, Sir. In connection with the proposal to establish a factory for the manufacture of heavy electrical equipment in India, the Government of India appointed a team of experts to visit fourteen possible sites in the country recommended by the State Governments. In 1956, the team visited the site near Avadi recommended by this Government. After however considering the recommendations of the experts, the Government of India ultimately decided to locate the factory at Bairagarh near Bhopal.

[29th March 1958

Sri N. K. PALANISAMI : ஆவடியில் அந்தத் தொழிற்சாலையை வைக்கலாம் என்று நிபுணர் கமிட்டி சொல்லியிருந்தும்கூட அங்கு வைக்காமல் போபாலில் வைக்கக் காரணம் என்ன ? ஆவடியில் வைக்கவேண்டும் என்பதாக மத்திய சர்க்காரிடம் ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா ?

The Hon. Sri V. RAMIAH : ஆவடியில் வைக்கவேண்டும் என்பது தான் நம்முடைய அரசாங்கத்தினுடைய கோரிக்கை. அதை வலியுறுத்திச் சொல்லிவந்தோம். ஆனால் நிபுணர் கமிட்டியால் அதையெல்லாம் பரிசீலனை செய்து இப்பொழுது தேர்ந்தெடுத்திருக்கும் இடம் மிகவும் சிறந்த இடம் என்று முடிவு செய்து அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

Sri K. ANBAZHAGAN : பிற மாகாணங்களைவிட சென்னை மாகாணம் தான் மின்சார விநியோகம் சம்பந்தப்பட்ட வரையில் தலைசிறந்து விளங்குகிறது என்று சொல்கிற இந்த அரசாங்கம் வேறு இடத்திலே ஒரு கனரகத் தொழிற்சாலையை வைத்தால் சென்னை மாகாணத்திலும் ஒரு கனரகத் தொழிற்சாலை இருக்கவேண்டுமென்று வலியுறுத்தி, இரண்டாவதாக ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துமா ?

The Hon. Sri V. RAMIAH : இரண்டாவது தொழிற்சாலை அமைப்பதாக முடிவு வந்தவுடனே மீண்டும் இதை வலியுறுத்துவோம் என்று நான் உறுதியளிக்கிறேன்.

Sri K. VINAYAKAM : What were the considerations which weighed with the expert team to come to the conclusion that Avadi was not suitable for starting this industry whereas our Government recommended the starting of this industry at Avadi?

The Hon. Sri V. RAMIAH : The Expert Committee have not come to the conclusion that Avadi is not suitable but they have come to the conclusion that the present site is better.

Fire accidents

* 464 *Q.*—**Sri S. LAZAR** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of fire accidents in the Tiruchirappalli district during the last five years;

(*b*) the number of houses damaged by fire;

(*c*) the estimate of damage;

(*d*) the number of Fire Service Stations in the district;

(*e*) whether the Government have received representation from the Tiruchirappalli District Planning Board to provide Fire Service Stations at Perambalur and Ariyalur; and

(*f*) if so, the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*)

Year.	Total number of fire accidents.
(1)	(2)
1953	193
1954	192
1955	228
1956	223
1957	218